# சாதனைப் பெண்மணிகள்



***Dr Geeta Varadan***
*Director, Advanced Data Processing Research Institute*



***Dr Tessy Thomas***
*Missile scientist and project director (Agni V missile)*



***CHANDA KOCHER***
*CEO & MD, ICICI Bank*

கணவனைப் பற்றிய தவறான கருத்துக்கள் அண்டை வீட்டாரிடம் பரவுவதை இப்பெண்கள் விரும்பமாட்டார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் அடுத்தவர்களைப் பற்றி அதிகம் குறைகூறும் பெண்கள், தங்களது குடும்பம் என்று வந்து விட்டால் வாய்க்கு ஒரு பெரிய பூட்டை மாட்டிக் கொள்கின்றனர் என்பதே உண்மை!

பெண் என்பவள் சமுதாயத்தின் உள்ள பல்வேறு ஏற்ற இறக்கங்களை எதிர்கொண்டு, நீச்சலடித்து வெற்றி பெறுவதற்கு பெற்றோர், உடன்பிறந்தோர், நண்பர்கள் என பலர் தேவைப்படுகின்றனர். இதில் மிக முக்கியமாக கணவனின் ஒத்துழைப்பின்றி பெண்ணின் வளர்ச்சி என்பது இயலாத காரியம் தான். இங்கு தான் ஆணாதிக்க சமுதாயம் உறங்காமல் விழித்துக்கொண்டுள்ளது. நடுத்தரக்குடும்பங்களில் பெண்களின் இயலாமையைப் புரிந்து கொண்ட கணவன்மார்கள், அவர்களை எப்போதும் தங்களது கட்டுப்பாட்டில் கைப்பாவையாக வைத்துக்கொள்வது என்றாகிவிட்டது. இதற்கு காரணம் பெண்கள் தான்! சுயமாகச் சிந்திக்க தெரிந்தாலும் அதை செயல்படுத்திட முடியவில்லை. கணவனின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமோ என்ற பயத்திலேயே அக்கம்பக்கத்தாரின் நல்ல உறவுகளை இழக்க நேரிடுகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் கணவனிடம் வெறுப்பை சம்பாதிக்கும் பெண்கள் தங்களுக்குள்ளேயே அழுது, அழுது கண்கள் குளமாகி இறுதியில் வியாதியில் கொண்டு போய் விடுகின்றது. இதையும்

**ஒரு மனைவி தனது கணவனின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் காட்டும் அக்கறையில்... ஒரு சதவீதமாவது தனது மனைவியின் ஆசைகள் குறித்து கணவன் சிந்திக்கும் காலம் தான் பெண்களின் வாழ்வில் பொற்காலமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.**